தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

டிசம்பர் 2024
மரம் 25
கனி 1

## நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.

யோவான் 14:6




MONTHLY
THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 60
தலைப்பு : பரதேசிகள் - Stranger
வேத வாசிப்பு : எபிரெயர் 11:8-21



1. நான் பரதேசியாய் சஞ்சரித் - ஆதியாகமம் 47:9
2. பூமியிலே நான் பரதேசி - சங்கீதம் 119:19
3. பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு - எபிரெயர் 11:13

**மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்**

**G-Pay & PhonePe - 9443558041**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**



**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**
**Branch Batlagundu**

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம்
**The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## THE WORD OF CHRIST
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 25 டிசம்பர் -2024 கனி - 1


ஆசிரியருரை

## நான் உமது அடியேன்
## I Am Your Servant



பரிசுத்த வேதாகமத்தில் தன்னை முழுவதுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்த மூன்று நபர்களைக்குறித்து இந்நாளின் செய்திவேளையில் தியானிக்கவுள்ளோம். **முதலாவது தாவீதைப் பார்க்கலாம்:** "உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்; நான் உமது அடியேன்" என்கிறான் (சங்.143:12). தாவீது ஒரு ராஜாவாக இருந்தும் தேவனுடைய சமுகத்தில் நான் உமது அடியேன் என்று தாழ்த்துகிறதை நாம் காண்கிறோம்.

உயர்வான பதவியில் இருக்கிறவர்களுக்கு நமக்கு மேலாக வேறு யார் இருக்கிறார்கள் என்ற ஆணவம் இருக்கும். ஆனால் தாவீதோ தன் எஜமானாகிய கர்த்தருக்கு தன்னை ஒரு அடிமையைப்போல ஒப்புக்கொடுத்திருந்தான். "தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடே கூட இருந்தார்" (1சாமு.18:14). சகலத்தையும் உண்டாக்கின தேவன் நம்மோடு கூட இருந்தால் எப்படியிருக்கும் என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். தாவீதின் வெற்றிக்கும் அவன் புத்திமானாய் நடப்பதற்கும் முழுமையான காரணம் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருந்தார். அவனுடைய வேண்டுதல்; "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" என்று ஜெபித்தான் (சங்.143:10).

ஜெபிக்கிறவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முதலாவது தேவசமுகத்தில் வைப்பார்கள். தாவீதின் ஜெபம் அப்படியல்ல; உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் என வேண்டிக் கொண்டான். தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக நாம் இப் பூமியில் உண்டாக்கப்பட்டோம் என்பதை அறிவீர்களா? பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்கள்தான் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். மற்றபடி அவரை நோக்கி; கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிட்டாலும் அவருடைய சித்தம் செய்யாமல் தேவராஜ்யத்தைக் காணமுடியாது. மேலும் தாவீது சொல்லும்போது; "கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்" என்கிறான் (சங்.119:65). தாவீது தேவனால் வழிநடத்தப்பட்டான். அவன் தன்னை முழுவதுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்தபடியால் அவனை அவருடைய வசனத்தின்படி நடத்தினார். அவருடைய ஆடுகளாகவும் அவருடைய மேய்ச்சலின் மந்தையாகவும் இருப்போமானால் திருப்தியுள்ளவர்களாக இருப்போம்.

தாவீது தன் வாழ்க்கையில் கர்த்தரை முன்வைத்தான். "பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றான் (1சாமு.17:45). கோலியாத்தை கண்டு பட்டாளமே நடுங்கியது. ஆனால் தாவீதோ கர்த்தருடைய நாமத்தினாலே சென்று அவனை வீழ்த்தினான். இது இஸ்ரவேலில் மாபெரும் வெற்றியாயிருந்தது.

**இரண்டாவது சாமுவேலைப்பற்றி தியானிக்கலாம்.** சாமுவேல் தேவனுடைய சமுகத்தில் வளர்க்கப்பட்டவன். அவன் வளர்ந்து வரும்வேளையில் "கர்த்தர் வந்து நின்று, முன்போல; சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்; சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்றான்" (1சாமு.3:10). சாமுவேல் முதலாவது ஆசாரியனாகிய ஏலி தான் கூப்பிடுகிறார் என்று நினைத்தான். ஏலி கர்த்தர் சாமுவேலைக்கூப்பிடுகிறார் என்று அறிந்து இனி கூப்பிட்டால் இவ்விதமாக சொல் என்று சொல்லியிருந்தான். அந்தப்படியாக சொன்னான். சிறுபிராயத்திலும் சாமுவேல் ஆசாரியனுக்குக் கீழ்ப்படிந்து நடந்திருக்கிறதை நாம் காணமுடிகிறது. தன்னுடைய இளம் வயதில் கர்த்தரையும் கர்த்தருடைய ஜனங்களையும் பற்றிக்கொண்டவன் சாமுவேல். "சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனேகூட இருந்தார்; அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை" (1சாமு.3:19).

தாவீதோடு கர்த்தர் இருந்ததைப்போல சாமுவேலோடும் இருந்தார். "சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது" என 1சாமு.3:20-ல் படிக்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் சில ஊழியர்களைக்குறித்து பக்கத்து தெருவில் போய்கேட்டால் கூட அவரைப்பற்றி தெரியவில்லை. ஆனால் சாமுவேலைப்பற்றி அந்நாட்டிலே தாண்முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்குள்ளும் அவன் நன்கு அறியப்பட்டவராயிருந்தான். அப்படியானால் அவன் எந்த அளவு அநேக இடங்களுக்குச் சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்திருப்பான் என நாம் அறியமுடிகிறது. இன்று இவ்விதமான ஊழியர்கள் எழும்பவேண்டும். அப்பொழுது நம் தேசம் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்.

சாமுவேல் கர்த்தரோடு மிகவும் நெருக்கமானவன். ஒரு முறை கர்த்தர் "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்" என காண்கிறோம் (1சாமு.15:11). இங்கே நீங்கள் தான் அவனை ராஜாவாக்கினீர்கள் என்று கர்த்தரை நோக்கி அவன் சொல்லவில்லை. ஏனெனில் அவனை முதல் ராஜாவாக கர்த்தருடைய அனுமதியின்பேரில் அபிஷேகம் பண்ணினவனே இந்த சாமுவேல் தான். ஆகையால் கர்த்தருடைய மனஸ்தாபத்திலே அவனும் பங்குகொண்டு இராமுழுதுவம் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான். இந்தவிதமாக தேவனுடைய சித்தத்தை முதலாவது நாம் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றார்போல வாழவேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி என்னோடு கூட விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார் எத்தனைபேர் அவரோடு

விழித்திருந்து ஜெபித்தார்கள். இன்றும் அப்படித்தான் இருக்கிறோம். தேவனோடு இசைந்தவர்களாக அவருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும். சாமுவேல் அந்தவிதமான ஒரு தீர்க்கதரிசியாக இருந்து செயல்பட்டான். ஆகையால் தேவனாகிய கர்த்தர் அவனோடு இருந்தார் என காண்கிறோம்.

முதல் ராஜாவாகிய சவுல் அப்படி என்ன காரியம் செய்தான் என நீங்கள் நினைக்கத்தோன்றும். கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய சமுகத்தில் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகையால் சாமுவேல்; "கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினால், அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்" (1சாமு.15:22,23).

அநேகர் கர்த்தருடைய சமுகத்தில் புறம்பாக்கப்படுகிறார்கள் என்றால் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறபடியால் அவர்கள் புறம்பாக்கப்படுகிறார்கள். கர்த்தருக்குப்பிரியமானது இன்னதென்று சோதித்து அறியுங்கள். சாமுவேல் கர்த்தருக்குப்பிரியமானதை இளம்பிராயத்திலிருந்து செய்து வந்த ஒரு அருமையான தீர்க்கதரிசி. சவுல் மற்றும் தாவீது போன்றோரை ராஜாவாக அபிஷேகம் செய்தவன். பலிகளையும் காணிக்கைகளையும் கர்த்தர் விரும்பவில்லை. அவைகளை கர்த்தரிடமே வாங்கி அவருக்கே கொடுக்கிறோம். அவர் கீழ்ப்படிதலைத்தான் அதிகமாக எதிர்பார்க்கிறார். இதை சவுலுக்கு உணர்த்தினார் சாமுவேல். அநேகர் சபைக்காக நாங்கள் அதைச் செய்கிறோம். இதைச் செய்கிறோம் என்பார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஒழுங்காக ஆராதனைக்கு வரமாட்டார்கள். அதை சரி செய்வதற்காக ஊழியக்காரனை நோக்கி நாங்கள் சபைக்காக அதைச் செய்யலாம் என்று இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட சபை ஊழியர் அந்த பணத்திற்கு மயங்கிவிடுவான். எல்லோரும் அப்படியல்ல. சாமுவேலைப்போல கடிந்து கொண்டு போதிக்கிற ஊழியர்களும் இருக்கிறார்கள். மேலும் சாமுவேல் சொல்லும்போது ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என்கிறான். ஆம், கர்த்தருடைய வசனத்திற்கு முதலாவது செவி கொடுக்க வேண்டும். யாருக்கோ எவருக்கோ சொல்லப்பட்டதைப்போலவும் கண்டும் காணாதவர்களாகவும் இருக்கக்கூடாது. கவனமாக கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி கொடுத்து அதற்கு கீழ்ப்படிய தேவன் எதிர்பார்க்கிறார். பில்லிசூனிய பாவத்தைக்குறித்து கேள்விப்படுகிறோம்.

பில்லிசூனியம் செய்யும்படியாக அப்படிப்பட்ட நபர்களை சிலர் நாடுகிறார்கள். அது மாபெரிய பாவமாக இருக்கிறது. அதற்கு சரியாக இரண்டகம் பண்ணுதல் இருக்கிறது. அதைப்போல முரட்டாம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது என்கிறான். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகர் உலகஅளவில் பார்க்கும்போது விக்கிரகாராதனை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இது தேவனுடைய பார்வையில் அருவருப்பான காரியமாகவும், தேவன் விக்கிரகாராதனை செய்கிறவர்களை தண்டியாமல் விடார்

என்றும் காண்கிறோம். தேவன் வெறுக்கிற காரியத்தை அநுதின வாழ்வில் செய்துகொண்டு கர்த்தருக்கு பிரியமாய் வாழமுடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஒரு நாளும் முடியாது. சவுல் இந்த விதமான காரியங்களை செய்தபடியால் அவனை ராஜாவாக இராதபடி புறம்பாக்கிப்போட்டார். தேவன் உங்களையும் புறம்பாக்கிப்போடாதிருக்க அவைகளை விட்டுவிலகி தேவனுக்குப் பிரியமானதை செய்யுங்கள். சாமுவேலோடும், தாவீதோடும் கூட இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார்.

**மூன்றாவது மரியாள்.** இவளும் தாவீது சாமுவேலைப்போல கர்த்தருக்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தவள். "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்" (லூக்.1:38). இயேசுவை தன் கர்ப்பத்தில் சுமப்பதற்கு தன்னை முழுமையுமாக ஒப்புக்கொடுத்தவள். ஐயோ என்னை ஜனங்கள் என்ன நினைப்பார்கள். ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு பிள்ளையைப் பெற்றாள் அவளை இந்த சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமா? போன்ற கேள்விகளை மற்றவர்களாக இருந்தால் கேட்டிருப்பார்கள். ஆனால் மரியாளோ அவ்விதமாக கேட்கவில்லை; தேவதூதனை சந்தித்தபோது இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை என்றாள்.

அநேக பெண்களுக்கு கிடைக்ககூடாத பாக்கியத்தை அந்நாட்களில் வாழ்ந்த இந்த மரியாள் பெற்றாள். இதனால் அவள் கிருபை பெற்றவளானாள். "அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து; கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்" (லூக்.1:28). கர்த்தர் மரியாளோடு கூட இருந்தார். கர்த்தரை மாம்சத்தில் சுமக்கிற ஒரு தாயாகவும் இருந்தாள். மேலும் அவள் சொல்லும்போது; "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்றாள் (லூக்.1:48).

ஆம், இன்றுவரை அவளை அநேகர் பாக்கியவதி என்று சொல்லுகிறார்கள். அந்த பாக்கியத்திற்கு ஏற்றவளாக தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார் என்றாள். அவள் தன்னை முழுவதுமாக தேவசமுகத்தில் அடிமையாக ஒப்புக்கொடுத்திருந்தாள். தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி கர்த்தரால் உயர்த்தப்பட்டாள். கர்த்தரைப் பெற்று எடுத்த தாயாக மரியாள் இருந்தபோதும். அவள் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தவளாகவும், அவருடைய உபதேசத்தின்படி நடக்கிற மற்றவர்களைப்போலவும் இருந்தாள். கானாவூர் கலியாண வீட்டில் திராட்சரசம் குறைவு பட்டபோது, அவளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கே அவள் என் மகன் என் வார்த்தையின்படி செய்வான் என்றோ அல்லது நான் சொன்னால் தட்டமாட்டான் என்றோ தான் அவரை பெற்ற தாய் என்றோ உரிமை பாராட்டியதாக வசனத்தில் இல்லை. மாறாக "வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் என்றாள்" (யோவா.2:5). இது அவளுடைய கீழ்படிதலையும், அடிமையாக ஒப்புக்கொடுத்தலையும் காட்டுகிறது.

**நான் உமது அடியேன் என்று சொல்ல நீங்கள் செய்யவேண்டியது என்ன?**

தாவீதைப்போலவும், சாமுவேலைப்போலவும், மரியாளைப் போலவும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.




**க**ர்த்தருடைய வார்த்தை நாம் வஞ்சிக்கப்படாதிருக்கும்படி மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறது. வஞ்சிக்கப்படுதல் என்பது ஒருவன் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பதும், பொய் சொல்லும்படிக்கு போதிக்கப்பட்டிருப்பதும் அத்தோடுகூட அவன் பொய்யான கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டிருப்பதும் ஆகும். ஆனபடியால் வாசிப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் நாம் வேதவாக்கியங்களைக் கொண்டிருக்க வேண்டும், ஒரு மனுஷன் எளிதாக வஞ்சிக்கப்பட முடியாது என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அவன் வஞ்சிக்கப்பட முடியும்.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு; நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத்.24:4,5) என்று சொன்னார். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் இன்று கிறிஸ்து அல்லது மேசியா என்று உரிமைபாராட்டிக்கொண்டிருக்கின்ற வஞ்சகர்களால் மக்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்! அறிவுள்ள ஜனங்கள் இப்பேர்பட்ட பொய்யினால் விழுந்து போவார்கள் என்று யார் நினைப்பார்கள், ஆனால் இப்படியாக விழுந்துபோகிறவர்கள் பலர் உண்டு.

பவுல், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி.6:9,10) என எச்சரித்தார். மீண்டும், அவர் "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று சொன்னார் (1கொரி.15:33).

கலாத்தியருக்கு எழுதுகின்றபொழுது, பவுல், "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்" (கலா.6:7,8) என்று சொன்னார்.

எபேசியர்கள் எச்சரிக்கப்பட்டனர், "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

(எபே.4:14). "இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (எபே.5:6).

பவுல் தெசலோனிக்கேயரை நினைப்பூட்டினார் "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாசதுரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2தெச.2:3). அவர் தீமோத்தேயுக்கு; "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2தீமோ.3:13) என்று எழுதினார்.

யாக்கோபு, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22) என்று எழுதினார். அதன்பின்பு யோவான் எழுத ஏவப்பட்டு, "நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1யோவா.1:8) என்று எழுதினார்.

வேதாகமத்தின் இப்பகுதிகளிலிருந்தும் கொடுக்க முடிந்த மற்றவற்றிலிருந்தும், நாம் வஞ்சிக்கப்படுவதற்கும் தவறாக நடத்தப்படுவதற்கும் மேலும் ஒரு நபர் வஞ்சகத்தினால் நித்திய இழப்பை முடிவாக அடைவதற்கும் சாத்தியகூருகள் உண்டு எனக் கற்றுக்கொள்கிறோம்.

■ **ஒருவன் தன்னைத் தானே வஞ்சித்துக்கொள்ளமுடியும்.**

அவனால் ஏதாவது செய்யமுடியும் அல்லது சிலவற்றை நம்புவதற்கு அதிகமாக காரியங்களைத் திரட்டிக்கொண்டு இது சரியாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் இது சரியென அவன் தானாகவே விவாதித்து நம்புகிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசி ஒபதியா என்பவர் வசனம் 3-ல் "உங்கள் இருதயத்தில் வஞ்சிக்கப்படாதிருங்கள்" என்று எழுதியுள்ளார்.

■ **ஒருவன் மற்றவர்களால் தன்னைத்தானே வஞ்சித்துக்கொண்டிருக்க முடியும்,**

பவுல் ரோமர் 16:17,18-ல் எச்சரித்தபடி, "...நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்". கவனித்துக் கேட்பவன் ஒரு பிரசங்கியாரிடத்தில் அல்லது போதகரிடத்தில் மிகுந்த நம்பிக்கையுடையவனாய், வேதாகமம் கூறுவதற்கு எதிரிடையாகயிருந்த

போதிலும் கூட தான் சத்தியத்தினால் போதிக்கப்பட்டிருக்கிறேன் என தன்னில் தானே திருப்தியடைந்து கொள்கிறான்.

**■ ஒருவன் புகழ்மிக்க தவறான கோட்பாட்டினால் வஞ்சிக்கப்படக்கூடும்.**

பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பிழைகள் நடந்துவருகிறது, அது மிகவும் பரந்து விரிந்து கற்பிக்கப்பட்டுவருகிறது. மேலும் இது தேவனுடைய வார்த்தைக் காட்டிலும் உண்மையுள்ளது போல் தோற்றமளித்து உண்மையாகவே தேவனுடைய வார்த்தைக்கு எதிரிடையாக நம்பப்படுகிறது. ரோமர் 16:18-ல் பவுலின் வார்த்தை இது குறித்து "...நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்"என தொடர்ந்து வழிநடத்துகிறார்.

**■ ஒருவன் பெருந்திரளான மக்கள் கூட்டத்தைப் பின்பற்றுவதின் மூலம் வஞ்சிக்கப்படலாம்.**

பெருந்திரளாக கூடிவரும் மக்களிடையே தவறுகள் இருக்க வாய்ப்பில்லை எனக் காரணப்படுத்துகிறான், ஆனால் மத்தேயு 7:13,14-ல் "...கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" என்று இயேசு சொன்னதை மறக்கிறான்.

இவைகளெல்லாம் வஞ்சிக்கப்பட்டுப் போவதற்கான பல வழிகளாக இருக்கின்றன. இது முன்னதாக திட்டமிடுகையில் தேவன் இரட்சிப்பினை - சபையை, ஏற்றுக்கொள்ளத்தக்க தொழுகையை, அவர் விரும்புகிறபடி நாம் வாழவேண்டிய வாழ்க்கை முறையை, கிறிஸ்துவின் மீண்டும் வரப்போகும் வருகையின் உறுதியை, அதைத் தொடரும் நியாயத்தீர்ப்பை, மேலும் நித்திய ஜீவனையே உருவாக்கியிருக்கிறார்.

பொதுவாக வேதவாக்கியங்களில் உருவாக்கப்பட்ட நிஜமான சத்தியங்கள் பிழையானதாக மறுக்கப்படுகையில் மனிதனால் - உருவாக்கப்பட்ட போதனைகள் பொதுவாக சத்தியத்தைப் போல ஏற்றுக் கொள்ளப்படுகிறது - சாதாரணமாக தேவனுடைய சத்தியங்களை அவர்கள் கேள்விப்பட்டிருப்பதைக் காட்டிலும் பல மனிதருடைய பொய்களை அதிகமாகக் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் ஆன்மீக காரியத்தில் கர்த்தருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றும்படி வேண்டிக்கொள்கிறோம்.

பல 'நல்ல' ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய தேவன் தங்களுடைய வீழ்ச்சியை காணாதவர் போலிருக்கிறார் என்று தங்களுக்குத் தாங்களே சொல்லுவது உண்மையான ஒரு சோகமாகும், அவர்கள் வேதாகமம் என்ன சொல்லுகிறது என்ற அடிப்படை போதனைகளை அறியவில்லை. அவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேவன் நம்முடைய அறிவீனத்தின் அடிப்படையில் நம்மை இரட்சிப்பதற்கு வாக்குபண்ணியிருக்கவில்லை, ஆனால் விசுவாசத்தின் அடிப்படையிலும் கீழ்படிதலின் அடிப்படையிலும் நம்மை இரட்சிக்க வாக்குப்பண்ணியிருக்கிறார்.

பெண்கள் பகுதி

# ஞானஸ்நானம் ஏன் முக்கியமானது?
## Why Is Baptism So Important?



ஞானஸ்நானத்தின் செயல்பாட்டினை காணும்போது ஒருவர் “ஞானஸ்நானம் ஏன் முக்கியமானது?” என கேட்கலாம் இது ஒரு சடங்காசாரம் மட்டுமா? தோற்றத்தின்படி அப்படி ஒரு சடங்காசாரமானால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகக் கருதப்படுவதற்கு முன்பு இந்த ஞானஸ்நானத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும்படி தேவன் ஏன் எதிர்பார்க்கிறார்?

இந்த கேள்விகள் நம்முடைய ஆழ்ந்த யோசனைக்கு பொருத்தமானதாயிருக்கிறது. அவைகளின் பதில்களைப் புரிந்துகொண்டு கோட்பாட்டின் முடிவான தோற்றத்திற்குள் செல்ல இது உதவும். பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அநேக சடங்காசாரங்கள் இருந்தன என்பது உண்மை, சடங்குகள் தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் ஒரு கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை முறையை ஒருவாக்க உதவும் அதிகாரப்பூர்வ கட்டளையை ஏற்படுத்தியது. புதிய ஏற்பாட்டு கட்டளையானது சடங்காசாரச் செயல்பாட்டிற்கெல்லாம் மேலான அர்ப்பணிக்கப்பட்ட இருதயம் மற்றும் வாழ்வினை எதிர்பார்த்து சத்தியம், உண்மை, போன்றவற்றின் ஆதாரத்திற்கு தாக்குதலை ஏற்படுத்துகிறது. பின் ஏன் மாற்கு 16:16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என கூறுகிறது.

**ஏன் தோற்றமளிக்கிற சடங்கிற்கு இப்பேர்பட்ட முக்கியத்துவம்?**

பதிலானது இந்த ஞானஸ்நானம் மனக்கசப்பும் வெறுப்பும் நீங்கிய பிரயத்தனம் என்ற நிகழ்வில் புதைந்துள்ளது. மனிதனுக்காக கிறிஸ்துவினுடைய ஒப்புக்கொடுத்தலின் கட்டப்பட்ட நிலை சிலுவையில் அவர் மரணத்தை அனுபவித்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்த்ததாகயிருந்தது. அந்நேரம்வரை அவர் கட்டப்படாதவராயிருந்தார். ஆனால் அந்நேரத்திற்கப்புறம் மனிதனுக்காகக் கட்டப்பட்டவரானார். நித்திய முழுமைக்குமான தேவனுடைய அதிகாரத்திற்கும் தேவனுடைய கரங்களின் படைப்பிற்கும் சிலுவையின் மேலிருந்த போது நடைபெற்ற சம்பவத்தினால் அவர் தாக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டார்.

தேவனுக்கு நம்முடைய ஒப்புக்கொடுத்தலை ஏற்படுத்துவதில் நாம் சரீரத்தில் மரிக்கவேண்டியதில்லை. ஆனால் நம்முடைய வாழ்வில் முன்னானவற்றையும், பின்னானவற்றையும் பிரிக்கிறதான ஒரு திருப்பம் ஏற்படவேண்டும். தேவன் இந்த வழியை திட்டம் பண்ணியிருக்கிறார். ஆனால் கிறிஸ்துவின் மரணத்தில் தம்மை ஒப்புக்கொடுத்தது போல நாம் ஞானஸ்நானத்தின் மூலம் அவர் நமக்காக மரித்தார் என்றும் அவருக்கு நம்மையே கொடுக்கின்றோம் என்றும் உலகத்திற்கு நாம் புதிய சிருஷ்டியாக சாட்சியாக இருக்கின்றோம்.

தெளிவாக ஞானஸ்நானமானது சடங்குகளைக்காட்டிலும் மேலானது நம்முடைய மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தல் மனந்திரும்புதல் மூலம் தேவனுடைய சித்தத்திற்கு அடிபணிவது கெத்சமனே சம்பவத்திற்கான நம்முடைய

பதிலாயிருக்கிறது போல, ஞானஸ்நானமானது கல்வாரி சம்பவத்திற்கு நம்முடைய பதிலாயிருக்கிறது. சிலுவையன்றி மனிதவர்க்கம்

**பாவியினிடத்தில் ஏற்படுகிற மனமாற்றம் அவன் தேவனால் மன்னிக்கப்பட்டிருக்கிறான் என பொருள்படுத்துகிறதா? அவன் அதிகமாக அதைச் செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?**

முழுமைக்கும் இரட்சிப்பிற்கான வாய்ப்பே கிடையாது ஞானஸ்நானத்தின் மூலம் பழைய மனுஷனின் மரணமும் புதிய மனுஷனின் பிறப்பும் இல்லாமல் ஒரு தனிப்பட்ட ஆத்துமாவிற்கு இரட்சிப்பைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.

வேதவாக்கியம் இந்த சத்தியத்தைக் குறித்து தெளிவாக போதிக்கிறது. ஆயினும் அதிகமான ஜனங்கள் இந்த ஒரு விஷயத்தில் இடறுகின்றனர். அநேக பிரிவினைக் கூட்டங்களின் கோட்பாடுகள் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்கின்றனர்.

அதிகமான பிரசங்கியார்கள் இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் ஒன்றையும் செய்கிறதில்லை எனப் போதிக்கின்றனர். ஏன் இந்த குழப்பம் வளர்ந்து வருகிறது ஏன் வேதவாக்கியத்தின் மிகத்தெளிவான கோட்பாடு புறக்கணிக்கப்படுகிறது.

**தேவனும் சாத்தானும் மனிதனுடைய ஆத்துமாவிற்காகப் போராடுகின்றனர்**

பதில் வெளிப்படையானது. மனிதவர்க்கத்தின் மேல் இருவர் அதிகாரமுள்ளவராயிருக்கின்றனர்: தேவனும் சாத்தானும், தேவன் நம்முடைய நித்திய இரட்சிப்பை விரும்புகிறார்; சாத்தான் தேவனிடமிருந்து நம்மை பிரிக்க விரும்புகிறான். தேவன் தம்முடைய குமாரனின் மரணத்தின் மூலமும் அவருடைய மரணத்திற்கான நம்முடைய மறுமொழி மூலமும் மன்னிப்பிற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார். அந்த மறுமொழி என்பது சத்தியத்தைக் கேள்விப்படுதல், அதற்குக் கீழ்ப்படிதல், பாவ வாழ்க்கையிலிருந்து திரும்புதல், கிறிஸ்துவில் உள்ள நம்முடைய விசுவாசத்தை மற்றவர்கள் மூலம் அறிக்கையிடுதல் என்பதாகும். ஆனால் உன்னத நிலையை அடையும் செயல், அந்தச் செயல் நம்மை உலகத்தின் ராஜ்யத்திலிருந்து தம்முடைய குமாரனின் ராஜ்யத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாகும்.

சாத்தான் நாம் எவ்வளவு தூரம் சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறோம். அதுபோல் நம்மை இரட்சிப்பதற்கு இது போதுமானது அல்ல என்பது பற்றியெல்லாம் கவலை கொள்ளமாட்டான். ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொள்வது அல்லது அவரை நேசிப்பது அல்லது அவருடைய பரிசுத்த கட்டளைகளை அவர்கள் பின்பற்றுவது போன்றவற்றைப்பற்றியெல்லாம் அவனுக்கு அக்கரையில்லை. ஆனால் சாத்தானுக்கு ஒரு திருப்புமுனை ஜனங்கள் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கின்றதை தடைசெய்வதே ஆகும். ஞானஸ்நானத்துடன் சம்பந்தப்படுகிற புதிய பிறப்பைக் குறித்த புரிந்து கொள்ளுதலை மூடிமறைப்பதன் மூலம் அவன் நல்லெண்ணங்களுள்ள ஜனங்களை தன் சுய ராஜ்யத்தில் தக்க வைத்துக்கொள்ளுகிறான். அதனால் தான் அவன் இந்த ஒரே சத்தியத்தைத் திரித்துக் கூறும் தன்னுடைய முயற்சியில் மிக அதிகமாக கவனம் செலுத்துகிறவனாயிருக்கிறான்.



# தேடுங்கள் – Seek

பெண்கள் பகுதி

*-Glory Arjunan*

இன்றைய நாட்களில் ஜனங்கள் எதை எதையோ நாடித் தேடுகிறார்கள். சிலர் நல்ல உத்தியோகத்தை தேடுகிறார்கள், சிலர் பட்டங்கள், பதவிகளை நாடுகின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுகின்றனர். சிலர் ஓயாது காலை முதல் மாலை வரை உணவுக்காகவும், உடைக் காகவும் அலைந்து திரின்றனர். சிலர் உலக சம்பத்தைத் தேடுகிறார்கள். சிலர் சமுதாயத்தில் ஒரு பெரிய ஆளாக மாறவேண்டுமென உலக மேன்மையை நாடுகின்றனர். இப்படி அழிந்து போகின்றவைகளையே தேடிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து வேதம் உலகத்தார் என்றும், அஞ்ஞானிகள் என்றும் இழித்துரைக்கிறது.

அன்பு சகோதரிகளே, "...இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத்.6:32). "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்.6:34). அநேகர் இரட்சிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் இன்னும் உலத்தாரைப் போலவும், அஞ்ஞானிகளைப் போலவும் இப்படிப் பட்டவைகளையே நாடித்தேடுகிறார்கள். தேவன் "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி?" (ரோம.8:32).

**கர்த்தரைத் தேடுங்கள்:**

**"உன் தேவனாகிய கர்த்தரைத் தேடு..."** (உபா.4:29) என வேதம் கூறுகிறது. உங்களை உண்டாக்கி அனுதினமும் உங்களைக் காத்துவருகிற கர்த்தரைத் தேடுங்கள். முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைத் தேடுங்கள். அவரே உங்கள் இரட்சகர், அவரே உங்களை சிருஷ்டித்தவர், அவரே உங்களைக் காண்கிறவர், அவரே உங்களை சகல தீமையினின்றும் விடுவிக்கிறவர். அவரே உண்மையுள்ளவர், அவரே உயிருள்ளவர், அவரே நித்திய பிதா. ஆகவே அவரையே தேடுங்கள். வீணானவைகளை நாடித்தேடி ஏமாந்து போகாதீர்கள். மேலும் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;" (ஏசா.55:6). அதிகாலை என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டைவார்கள்" (நீதி.8:17) என வேதம் கூறுகிறது. ஆம், நம்முடைய அனுதின பாடுகளில் தேவன் நம்மோடிருக்கும்படிக்கும், நம்முடைய காரியங்கள் யாவும் கைகூடி வரும்படிக்கும் நாம் சோதனைக்குட்படாதபடிக்கும் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்.

**கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள்:** கர்த்தர் நமக்கு ஷேமத்தைக் கொடுக்கும்படிக்கு அவருடைய முகத்தைத் தேடுங்கள் என்று 2நாளா.7:14

கூறுகிறது. நாம் ஷேமத்துடனிருப்பது தேவசித்தம். ஆனால் அநேகர் ஷேமம் அடையும்படி அவருடைய முகத்தைத் தேட மறந்து விடுகின்றனர். மனுஷருடைய தயவையே நாடி ஓடுகின்றனர். ஜெபிக்க நேரமில்லையென்று கூறி கர்த்தருடைய முகத்தைத் தேடாமல் இரவெல்லாம் தங்களுடைய விருப்பத்தையே நிறைவேற்றும்படி திட்டமிட்டு அதிகாலையில் அதே நினைப்போடு எழுந்து உலகத்தாரைப் போல அழிந்து போகின்றவற்றையே தேடிச் செல்லுகின்றனர். காரியம் வாய்க்காமல் திரும்புகின்றனர். அல்லது காரியம் வாய்த்தாலும் அது அதிசீக்கிரத்தில் அழிந்து போகக் கூடிய அநித்தியமானவை என்பதை மறந்து முடிவிலே ஏமாற்றமடைகின்றனர். தாவீது ராஜா பாடும்போது; "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" (சங்.34:5) என்று பாடுகிறான். நாமும் கர்த்தருடைய முகத்தை நோக்கிப்பார்த்து பிரகாசமடை வோமாக!

**தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்:** "தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (லூக்.12:31) என வேதம் கூறுகிறது. மத்.6:32-ம் கூட "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை...... தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்கிறது. இங்கு தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுங்கள், அதை முதலாவது தேடுங்கள் என்று அறிவுறுத்திக் கூறப்படுவதை சற்று சிந்திக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போல உலகக்காரியங்களையே நாடித்தேடுவதை தேவன் விரும்புகிறதில்லை. தம்முடைய பிள்ளைகள் தம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து தம்முடைய ராஜ்யத்தையே தேடும்படி விரும்புகிறார். அவருடைய விருப்பத்தின்படி செய்யும் போது நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச்செய்வார். அன்பு சகோதரியே, இன்னும் உலகம் உலகம் என்று உலகத்தையே நாடி முடிவிலே கவலைப்பட்டு கலங்குவதை நிறுத்துங்கள். தம்முடைய சொந்தகுமாரனையே ஒப்புக்கொடுத்து உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை நினைத்தருளி அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோவேன் என்று சொல்லி அழைத்தார். அழைத்தவர் அவர்களை நாற்பது வருடங்களாகப் போஷித்து குறைவின்றி வழிநடத்திச் சென்றார்.

அதன்பின் தாம் வாக்களித்த வண்ணம் தம்மை விசுவாசித்தவர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் கொண்டுபோய் சேர்த்தார். ஆம் உங்களை அழைத்தவரும் அவரே! அவர் உங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரம கானானாகிய பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி அவருடைய ராஜ்யத்தையே தேடுங்கள் என்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். சபையாகிய இந்த ராஜ்யத்தைத்

தேடும்போது நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். குறைவின்றி நடத்திச்செல்லப்படுவீர்கள். ஏனெனில் கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார் (எபே.5:29). சபையாகிய ராஜ்யத்தைக் குறித்த வைராக்கியம் உங்களுக்குள் இருக்கட்டும். சபையை அலட்சியம் செய்யாதீர்கள். விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே பரம கானானுக்குள் சேர்க்கப்படுவர்.

**கர்த்தரைத் தேட இதுவே காலம்:** ''......கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணும் மட்டும், அவரைத் தேடக்காலமாயிருக்கிறது'' (ஓசி.10:12) என வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் பிரயாசங்களுக்கேற்ற, பலனை வருஷிக்கப்பண்ணும் வரைக்கும் அவரைத்தேடக்காலமாயிருக்கிறது. ஆம், காலம் சமீபித்து வருகிறபடியால் இதுவே அவரை தேட வேண்டிய சமயமாயிருக்கிறது. அன்பு சகோதரியே, நீ ஒருவேளை கர்த்தராகிய உன் சிருஷ்டிகரைத் தேடாமலிருக்கலாம். தாமதிக்காதே. ''.....இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்''. எனவே இன்றே அவரைத் தேட வேண்டிய காலமாயிருக்கிறது. இன்று அவரைத் தேட தாமதிப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவாய். கர்த்தர் வந்து உங்கள் மீது நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

அன்பு சகோதரிகளே, தேடுங்கள் அப்பொழுது உங்களுக்கு தேவையானவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும். உலகத்தாரைப் போல அல்ல. ராஜ்யத்தின் பிள்ளைகளாய் விசுவாசத்துடன் ''...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்...'' (மத்.7:7). ''என்னைத் (கர்த்தரைத்) தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்'' (ஆமோ.5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டடையும்படிக்கும், நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும் கர்த்தரைத் தேடுங்கள், கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள், தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறபடியால் இன்றே தேடுங்கள்.

**நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது - யோவான் 15:19**
**-இயேசு கிறிஸ்து**

**ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய (பதிவு எண்) Ref.No-யை எழுதவும். நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண் அதாவது Ref.No. ஐ தெரியப்படுத்தவும்.**

# இயந்திர வாழ்க்கை



வாசகர் அனைவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு நாளும் குடும்பத்தின் தேவைகள், பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை இவைகளைப் பற்றி சிந்திக்காத குடும்பங்கள் இருக்க முடியாது. காலை எழுந்ததிலிருந்து மாலை வேலைக்கு சென்று வீடுதிரும்பு மட்டும் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலையை செய்ய ஒவ்வொருவருக்கும் நேரம் சரியாக இருக்கிறது. இதில் குடும்பக்காரியங்களை நினைத்தால் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு இயந்திர வாழ்க்கையை ஒவ்வொருவரும் செய்துகொண்டிருக்கிற காலமாக இது இருக்கிறது. ஒரு நிமிடத்தைக்கூட வீண்செலவு செய்யாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் என்று சொல்லலாம்.

இப்படியிருக்கிற இக்காலத்தில் நீங்கள் கர்த்தருக்கு கொடுக்கும் நேரம் எவ்வளவு? பைபிள் வாசிக்கும் பழக்கம் உண்டா? சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்கிறீர்களா? ஆறுநாட்களும் உங்களுக்காக அல்லது உங்களுடைய குடும்பத்திற்காக உழைக்கிறீர்களா? கர்த்தருக்காக, கர்த்தருடைய சபைக்காக ஒரு நாளையாவது ஒதுக்கிவைத் திருக்கிறீர்களா? வேலைக்கு போய்வரவே நேரம் சரியாக இருக்கிறது. இதற்கு மேல் என்ன செய்வது, டி வி பார்த்துவிட்டு சாப்பிட்டு சீக்கிரம் படுக்கைக்குச் சென்றால்தான் மறுநாள் வேலைக்கு போகமுடியும் என்று சொல்லும் கூட்டம் ஒருபுறம் இருக்கிறது.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்குள் வளரவேண்டும் என்ற என்னத்தோடு இந்த மாத இதழை ஒவ்வொரு மாதமும் நாங்கள் அச்சிட்டு வெளியிடுகிறோம். கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்த ஒரு சிலருடைய உதவியினாலும் சில சபைகளின் உதவியினாலும் இவ்விதழ் உங்களுக்கு அனுப்பப்படுகிறது. கர்த்தரை அறியாதவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படவேண்டும்.



இக்கடைசி நாட்களில் ஆத்தும அறுவடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். எங்களோடு மனம்விட்டு பேச ஒரு கடிதம் எழுதுங்கள். உங்கள் மன பாரம் குறைய தேவனை நோக்கி ஜெபிப்போம்.

ஆசிரியர்

# என் சிநேகிதர் - My Friend




பல வருடங்களாகத் தேடினேன் தேடினேன்
ஒரு சிநேகிதனை இப்பூவில்
ஒருவனையும் நான் காணவில்லை;
சிநேகிக்க ஒரு காலமுண்டு அப்படியே
பகைக்க ஒரு காலமுண்டு என்பதைப்போல
பகைஞர் ஆயினர் நான் சிநேகித்தவர்கள்!
ஏனோ தெரியவில்லை – ஆனால்
என்னை ஒருவர் சிநேகிக்கிறார் என்பதைக்
கண்டு கொண்டேன் அவர் அருளிய வேதத்தில்!

எல்லாக் காலங்களிலும் சிநேகிக்கும் அவரை
ஏற்றுக்கொண்டேன் என் சிநேகிதராய்



அன்று முதல் இன்றுவரை அவரே
என் சிநேகிதர்
என் வழிகாட்டி
என் மேய்ப்பர்
என் ஆலோசகர்
என் ஆண்டவர் –என
அறிந்து கொண்டேன் என் ஆத்தும நண்பரை!
அறிவீரா மானிடனே
அவரே உன் ஆண்டவர் என்று!
ஏற்பாயா உன் உள்ளத்தில்
என் சிநேகிதர் ஏசுவை இன்று!
–ஆசிரியர்



**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி TWOC NO.5 டிசம்பர் 2024**

வாசகருக்கான நற்செய்தி

1. எதைத் தேடினால் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்?
2. கிறிஸ்துமஸ் கொண்டாட இயேசுவோ அவருடைய சீஷர்களோ கட்டளையிட்டார்களா?
3. ஞானஸ்நானத்தின் மூலம் பழைய மனுஷனின் மரணமும் புதிய மனுஷனின் பிறப்பும் இல்லாமல் ஒரு தனிப்பட்ட ஆத்துமாவிற்கு இரட்சிப்பைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியுமா?
4. அநியாயக்காரர்... முதல் கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரிப்பதில்லை என எந்த வேத பகுதியில் சொல்லப்பட்டுள்ளது?
5. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார் என சொல்லும் பெண் யார்?
6. ஆசிரியர் கண்டு கொண்ட சிநேகிதர் எவர்?
7. நான் குணப்பட்ட பின்பு எவர்களைக் குணப்படுத்த வேண்டும்?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம் மாதம் 25 -ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி. ஆசிரியர்.

## நடப்புச் செய்திகள்

■ சீனாவில் டிரோன்கள் தயாரிக்கும் DJI நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது

■ ரயில்களில் AC பெட்டிகளில் வழங்கப்படும் கம்பளிகள் 1 (அ) 2 மாதங்களுக்கு ஒருமுறை தான் துவைக்கப்படும் என இந்திய ரயில்வே RTI கேள்விக்கு பதிலளித்துள்ளது.

■ தமிழக்தில் 2 அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்பட உள்ளன AC இல்லாத முன்பதிவு மற்றும் பொதுப்பெட்டிகளுடன் கூடிய அம்ரித் ரயில்கள் ஜனவரி மாதம் அறிமுகமானது

நன்றி - NewsPoint

## ஆசிரியர் கடிதம்...

**வாசகர் அனைவருக்கும் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள்.
இவ்வருடம் முழுவதும் நம்மை சுகத்தோடும்,
பெலத்தோடும் பாதுகாத்து வழிநடத்தின தேவனுக்கு ஸ்தோத்திரம்.
புது வருடத்தில் புது பெலனையும்
புதிய ஆசீர்வாதங்களையும் உங்களுக்கு கர்த்தர் கொடுப்பாராக!
இவ்வருடத்தில்
பத்திரிக்கைக்காக ஜெபித்த மற்றும் கொடுத்து தாங்கிய
அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி சொல்லுகிறோம்.
யாவருக்கும் எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள்
2025**

**தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்
எபேசியர் 5:21**



# கிறிஸ்துமஸ்

## CHRISTMAS

*-John S.Nathan*

**நீ**ங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள், அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப்பலன் தருகிறதுபோல....கொலோ.1:6 உலக இரட்சகர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகளுக்குள்ளாக....எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டது" லூக்.24:47. அவரின் கடைசி பெரிய கட்டளைகளை அப்போஸ்தலர்கள் நிறைவேற்றினார்கள். பெந்தெகொஸ்தே நன்னாளில் எருசலேமில் ஒன்றுகூடிய பக்தியுள்ள யூதர்கள் பேதுருவினால் முதன் முதலாக பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியை கேட்டு, விசுவாசித்து, பாவஅறிக்கையிட்டு, மனந்திரும்பி 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். நாடுதிரும்பிய அவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்கள் (அப்.8:4). மற்றும் சமாரியா, எத்தியோப்பியா (எகிப்து) அப்.8-ம்அதிகாரம். ஆசியாமுழுவதும் அப்.19:26 விக்கிரக ஆராதனைக்கு பெயர்போன ஆசியாவின் எபேசு பட்டணத்தில் மகாதேவியாகிய தியானாளின் விக்கிரகத்தொழில், மற்றும் ஆராதனை நின்றுபோகும்படியாக பவுலடியாரின் பிரசங்கம் வழிவகுத்தது. கி.பி 52-ல் தோமாவினால் தென்னிந்தியா, மற்றும் வடபகுதிகளிலும் சுவிசேஷத்தின் பலனாக 6000 பேர் கீழ்ப்படிந்தனர்.

ரோம அரசன் கான்ஸ்டான்டி நோபிள் ஞானஸ்நானம் பெற்றதுடன் யூத முறையிலான ஆராதனையை மாற்றி சனிக்கிழமை ஓய்வுநாளுக்கு (Holiday) பதிலாக, சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட, கிறிஸ்து உயிர்த்தெழுந்த முதல் நற்செய்தி அறிவிக்கப்பட்ட, திருச்சபை தொடங்கப்பட்ட கர்த்தருடைய நாளாகிய வாரத்தின் முதல் நாளான (Holyday) ஞாயிற்று கிழமையை பரிசுத்த நாளாக அரச கட்டளையாக அறிவிக்கப்பட்டதுடன், எல்லாரும் அதனை கைக்கொள்ளவும் ஆணையிட்டான். இதன்பிறகு கி.பி25.12.336-ல் ரோமர்கள் வழிபட்ட சூரியனை வழிபடவும், மன்னர் "அறிலியஸ்" (AURELIUS) பிறந்த நாளை கொண்டாடுவதற்கு பதிலாக இரண்டாம் ஆதாம் (முதல் ஆதாம் 6-ம் நாளில் உண்டாக்கப்பட்டதை போல) இயேசுகிறிஸ்துவின் பிறந்தநாளாக முதன்முதலில் ஜனவரி 6-ம் நாள் கொண்டாடப்பட்டது. இதனை எகிப்தின் அலெக்சாண்டிரியா மற்றும் கிழக்கத்திய நாடு (அரேபியா) களில் கொண்டாடினர். வேதாகமத்தில் இவ்விதமான பண்டிகை கொண்டாடப்பட வேண்டுமென இயேசுகிறிஸ்துவோ அல்லது அவரின் சீடர்களோ கட்டளையிடவோ, அவர்கள் ஆராதிக்கவோ இல்லை என்பதை சிந்திப்போமாக! அதன்பிறகு மேலும் சிலர் எழும்பி தங்களின் விருப்பம் போல தேவனை ஆராதிக்கத் தொடங்கினர். கத்தோலிக்கர்கள் வேதாகமத்தில் காணப்படாத இவ்விதமான ஆராதனைகளை செய்ய ஆரம்பித்தனர்.

LOW MASS ரோமர்களின் அடிமைகள் இருட்டோடே ஆலயத்திற்கு சென்று பாட்டு பாடாமல், பிரசங்கத்தை கேட்காமல் தாங்கள் மட்டும் ஜெபித்து வந்தனர்.

SUNG MASS இவ்வாராதனையில் பாட்டு பாடுவார்கள். ஜெபிப்பார்கள்.

HIGH MASS இது உயர்வான சிறப்பு ஆராதனை, இதில் பாடல், ஜெபம், பிரசங்கம், காணிக்கை திருவிருந்து பங்கிடப்படும்; சிறப்பாக இறந்தவர்களுக்காக ஜெபவேண்டுதல் ஏறெடுக்கப்படும்.

DRY MASS இதில் பிரசங்கியார் இல்லாதபோது அவரின் உதவியாளர்களால் நடத்தப்படும் ஆராதனையாகும்.

GREGORIAN MASS கிரிகோரியன்மாஸ், இதில் சிறப்பாக குறிக்கப்பட்டவைகளுக்காகவும், குறிப்பிட்ட நிகழ்வுகளுக்காக இறந்துபோன சிறப்பானவர்களுக்காகவும் தொடர்ந்து பல நாட்கள் செய்யப்படும் ஆராதனையாகும். மேலே கூறிய ஆராதனை முறைகளோ (கிறிஸ்மஸ் உட்பட) தேவனால் கட்டளையிடப்படவில்லை. மேலும் 40 நாட்கள் லெந்து நாட்களாக வழிபடவும், ஈஸ்டர் பண்டிகை, கிறிஸ்துவின் படத்திற்கு மாலையிட்டும், விளக்கேற்றியும், அதனை வணங்கி, வழிபட்டு வருவதும் வேதாகமம் கூறும் ஆராதனை அல்லவே அல்ல.

மோசேயின் பிரமாணத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்த இயேசு இரட்சகர், யூதர்கள் கடைபிடித்து வந்த பஸ்காவைப்புசிக்கஆசையாயிருந்தேன் லூக்22:15 என்றதுடன் அவரின் சீடர்களுக்கு தனது மரணத்திற்கு பிறகு அவர்கள் கடைபிடிக்க வேண்டிய "புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்" (எரே.31-34) லூக்.22:15-29; மாற்கு14:22-25; மத்.26:26-29. ஆனால் இன்று சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனையில் திருவிருந்து மாதத்திற்கு ஒரு முறையோ ஆண்டுக்கு சில முறையோ அவர்கள் விருப்பம்போல கைக்கொள்ளுகிறார்கள். அப்.20:7; 1கொரி.16:2-ன்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கடைபிடிக்க வேண்டிய கட்டளையை மறந்துவிடுவது எத்தனை கோபாக்கினைக்குரியது என்பதை எண்ணிப்பார்க்கக் கடவோம். இதற்கு பதிலாக டிசம்பர் 25-ம் தேதி மட்டும் கிறிஸ்துவின் பிறப்பினை கொண்டாடி (அவர் சொல்லாததை, விரும்பாததை) வருவது யாருக்கு நன்மை? ஞாயிறு ஆராதனையில் (1) பாடல்கள் ( 2 ) ஜெபங்கள் ( 3 ) வேதவகுப்பு ( 4 ) கர்த்தருடைய பந்தி ( 5 ) காணிக்கை ஆகிய **இவ்வைந்து செயல்கள் இருக்கவேண்டும். ஒன்று தவறினால் கூட அது முழுமையான தேவன் விரும்பும் ஆராதனை ஆகாது.** அவைகளால் ஆசீர்வாதம் கிடைக்காது என்பதுடன் அவை குற்றப்படுத்தக்கூடியதாக உள்ளது கொலோ.2:16,17,19 மனுஷனுடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடப்பதென்ன? "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும் .....இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிக்கும் பிரயோஜனப்படாது" (வசனம் 21,23). எனவே

கிறிஸ்துமஸ்விழா, கிறிஸ்மஸ் மரம், நட்சத்திரம், (STAR)மெழுகுவர்த்தி ஏற்றுதல் மற்றும் பல மனித நடவடிக்கைகளைக் கைக்கொள்வது தேவன் கட்டளையிடாத செயலாகும். மேலும் பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் தேவன் அவனுக்கு (மட்டுமே) செவிகொடுப்பார் (யோவா.9:31).

(கி.மு.712-ல்) "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; (Lip Service) அவர்கள் இருதயமோ எனக்குத் துரமாய் விலகியிருக்கிறது. ...மனுஷனாலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது என்று ஏசா.29:13 கூறியதை நன்கு அறிந்த இயேசுகிறிஸ்துவும்... வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றார் மத்.15:6-9; யாக்.3:17; மாற்.7:6-8 வாசியுங்கள், சிந்தியுங்கள்.

**இன்றைய காயீன்கள்**

தேவனுடைய கட்டளைகளை கடைபிடிக்காமல், தம் சொந்த வழியிலே நடந்து ஆராதனைச் செய்வது. பொல்லாங்கனாகிய காயீன் வழிச் செல்லாமல் 1யோவா.3:12..... இயேசுவானவர் நமக்கு உண்டாக்கின புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணின வழியாய் ஆராதிப்போம். எபி.10:19-22 விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அப்படியில்லாவிட்டால் பிதாவும், குமாரனும் நம்மைப் பார்த்து ... "இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து ...பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள் (யூதா 11) என்றவர்களாவோம். இன்றைய உலகிலே எண்ணற்ற மதங்களும் கோடிக்கணக்கில் இவ்வுலகில் வாழ்ந்திராத தெய்வங்களும் மனிதனால் உண்டாக்கப்பட்டு, வணங்கப்பட்டு வருகிறது. ரோமர்களும் தங்களின் தெய்வங்களோடு கிரேக்க கடவுள்களையும் சேர்த்து வழிபட்டனர். இன்னும் நாம் கட்டுக்கதைகளுக்கு செவிகொடாமல் கிறிஸ்து மூலம் வழங்கப்படும் இரட்சிப்பை பெற்று அப்.4:12 அவருக்கு பிரியமாய் வாழ்வோமாக! மற்றவர்களுக்கும் அறிவித்து, அவர்களையும் அழைப்போமாக!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை விழாவாக ஆண்டுக்கொருமுறை டிசம்பர்25-ல் கொண்டாடாமல் ஒவ்வொருநாளும் நம் இருதயத்தில் அவர் வசிக்க இடம் கொடுத்து அவர்கட்டளையிட்டவைகளை மட்டும் செய்வோம். அவரின் இறுதி கட்டளையை ".....அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கக்கடவோம்" லூக்.24:47. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு (நமக்கு) உபதேசம் பண்ணும்போது அவர் உலகின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்முடனேகூட இருக்கிறார் என்பதை மறவாதேயுங்கள் மத்.28:20.

எனவே நாம் மனித கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொண்டு வாழாமல் **"நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம்" 1யோவா.5:2.**

## ஊழியம் என்பது என்ன?



**ஊழியம் என்பது....**

✶ ஒரு இரட்சிக்கப்பட்டுள்ள பாவி அன்போடும் சாந்தத்தோடும் இழந்துபோன பாவிக்கு, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென உபதேசித்தல்.

✶ ஆவிக்குரிய போஜனத்தைக் கண்டுகொண்டிருக்கிற ஒருவன் ஆவிக்குரிய பசியினால் வாடுபவர்க்கு அந்த உணவைப் பகிர்ந்து கொடுத்தல்.

✶ தேவனுடைய விசுவாசமிக்க ஒரு குழந்தை தேவனுடைய விழுந்துபோன ஒரு குழந்தையை அன்போடு திரும்பவும் தொழுவத்திற்குள் அழைத்து வருதல்.

✶ நம்முடைய தலைவருக்கென திரளான அறுவடையை நாம் கொண்டு வர முடியுமென விளைச்சலற்ற நிலங்கள் மேல் நம்முடைய கண்களை ஏறெடுத்து ஒவ்வொன்றும் செய்தல்.

✶ பசியுள்ளோரை போஷித்து, நிர்வாணிகளை உடுத்துவித்து, வியாதியஸ்தரையும், சிறையிலிருப்போரையும் சந்தித்து, மறுகன்னத்தைத் திருப்பிகொடுத்து, சத்துருக்களுக்காக ஜெபித்து, நமக்குவிரோதமாய் யுத்தம் பண்ணுகிறவர்களை ஆசீர்வதித்து, நம்மையும் மற்றவர்களையும் இரட்சிக்கும் பொருட்டு விலகிச்செல்லாதிருத்தல்.

**ஊழியம் என்பது எது அல்ல....**

✶ நீ சரியானவனென்றும் உன் நண்பன் சரியில்லாதவனென்றும் நிரூபிக்க முயற்சித்து ஒரு நண்பனோடு கர்வமாக விவாதிப்பது.

✶ மற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவிக்க அலட்சியம் செய்கையில் உல்லாசத்திற்காக உணவுக்காக ஐக்கியத்திற்காக ஒரு இடத்தை கட்டுவது.

✶ பிரிவினை உலகத்தைப் பிரியப்படுத்தும் பொருட்டும் மனந்திருந்தாத ஜனங்களால் நம்முடைய அங்கத்தினர்களை அதிகப்படுத்தும் பொருட்டும் சத்தியத்தை விட்டுக்கொடுத்தல்.

✶ பாவத்தில் இழந்துபோன உலகத்தின் தேவைகளை புறக்கணிக்கையில் நம்முடைய சொந்த வசதிக்காக மற்றும் இன்பத்திற்காக கொடுத்தல்.

✶ கோடிக்கணக்காக ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேள்வி படாதிருக்கையில் மழைகாலத்திற்காகப் பணத்தைப் பதுக்கி வைத்தல்.

**நீ ஒரு ஊழிக்காரனா?**

- The Voice of Truth....

**ஜெபியுங்கள்**



- நம்நாட்டிற்கு நல்ல மழையை கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- நம் தேசம் கர்த்தரை அறிந்துகொள்ள...
- நாட்டின் ஒற்றுமைக்காக...
- தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழுக்காக...
- 24 hours Twoc Tv Channel தொலைக்காட்சி மற்றும் யூடிப் நிகழ்ச்சிக்காக...

சிறுவர் பகுதி



# சீமோனே, சீமோனே...

வேத பகுதி: லூக்கா 22:31-32

இந்த வார்த்தையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து சொன்னார். பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் (அதாவது பிசாசு) உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பள்ளியிலே சிலர் முந்தி முந்தி பேசுகிறவர்களை பார்த்து இருப்பீர்கள். இவர்களை முந்திரிக்கொட்டை என்று அழைப்பர் அதைப்போல பேதுருவும் பன்னிரண்டு சீஷர்களிலே ஒருவராக இருந்தார்.

நாமும் சில வேளைகளில் நம்மை நாமே கவனிக்காமல் மற்றவர்களை பார்ப்போம். முதலாவது நம்மை சரிசெய்ய வேண்டும். இல்லையென்றால் பிசாசு கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல நம்மையும் புடைக்க ஆண்டவரிடம் உத்தரவு கேட்டுக்கொள்வான். புடைக்கும்போது நாம் பதரைப் போல விசுவாசம் உடையவர்களாக இருந்தோமானால் பறந்தே போய்விடுவோம். நல்ல கோதுமை மணிகளைப்போல உறுதியான விசுவாசமுடையவர்களாக இருப்போமானால் பிசாசு நம்மைப் புடைக்கும்போது சுளகிலே இருப்போம் அப்படியென்றால் கர்த்தரோடு இருப்போம். ஆகையால் நாம் சரியான பிறகு நம் சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நமக்காக கர்த்தர் வேண்டுதல் செய்யக்கூடியவராக இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்தவராகவும் இருக்கிறார். அதேபோல பேதுருவின் விசுவாசத்தை அறிந்த ஆண்டவர் உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். ஒருவேளை கர்த்தர் வேண்டிக்கொள்ளாதிருந்தால் பிசாசு புடைக்கும்போது பதரைப்போல பேதுரு பறந்தேபோய்இருப்பார். ஆகையால் நீ குணப்படு என்றார். நாமும் முதலாவது குணப்பட்டு பின்பு மற்றவர்களை குணப்படுத்துவோம். அப்படியென்றால் நாம் சரியானபிறகு மற்றவர்களை சரிசெய்வோம். செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:**
**“உங்கள் பொறுமையினால்**
**உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்” (லூக். 21:19).**

## வேத அறிவுப் போட்டி எண்: 292

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை என்ன செய்யாது?
2. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறதா?
3. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் என்று எந்த தீர்க்கதரிசி குறிப்பிடுகிறான்?
4. எவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடுவிடாய்த் திரியப்பழகுவார்கள், சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல; அலப்புகிறவர்களாயும் வீணலுவற் காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்?
5. கீலேயாத் அக்கிரம ஸ்தலமோ?
6. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக்கொண்டு... என பவுல் யாருக்கு எழுதுகிறான்?
7. என் தேவனுடைய தொண்டரே என எந்த தீர்க்கதரிசி எழுதுகிறான்?
8. தேவன் ஆதிகாலமுதல் எதைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்?
9. குருவிக்குத் தரையிலே சுருக்குப் போடப்படாதிருந்தால், அது கண்ணியில் அகப்படுமோ? என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் பேசினனார்?
10. நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயத்திருக்கிறோம் என எந்த புஸ்தகத்திலே எழுதப்பட்டுள்ளது?

## வேதாகம ஆய்வு... 76

### தீனாள் - Dinah

1. தீனாள் என்றாள் நீதி என்று அர்த்தம்
2. தாய் லேயாள்
3. தகப்பன் யாக்கோபு – ஆதி.30:21
4. சீகேம் அவளை தீட்டுப்படுத்தினான் – ஆதி.34:5
5. யாக்கோபின் பிள்ளைகள் பழிவாங்கினார்கள் – ஆதி.34:25



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

December 2024

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: Six Days of the Week

*Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV &*




## *24 Hours Worldwide Twoc TV Channel*

YouTube: the word of christ



Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW





Contact Us: 6379350509

To

Postman Remarks (If Undelivered):
- [ ] Refused
- [ ] No such person
- [ ] Address insufficient
- [ ] Left without instructions
- [ ] Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan